**பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயல்முறை ஆணைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப.,**

**செ.மு.எண்:அ5/2110/2024** **நாள்:10 .04.2024**

பொருள்: பொதுப்பணி – பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம், சென்னை–5 கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ஆ.செ.பிரியங்கா காந்தி என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 23.01.2020.
2. அரசாணை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.02.03.2016.
3. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் செயல்முறை ஆணை எண்.அ5/7248/2021, நாள். 12.03.2022.
4. மதுரை கள்ளர் சீரமைப்பு, இணை இயக்குநர் அவர்களின் கடித எண்.எச்7/8485/2023, நாள்11.07.23
5. அரசாணை எண்.33, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்.08.03.2023

**ஆணை**

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் அரசு கள்ளர் மாணவர் விடுதியில் காவலராகப் பணியில் இருந்த போது 05.03.2013 அன்று இறந்த திரு.ஆ.செல்லக்கண்ணு என்பவரின் மகள் திருமதி.ஆ.செ.பிரியங்கா காந்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பார்வை 6–ல் படிக்கப்பட்ட செயல்முறையின் மூலம் உத்தரவிடப்பட்டது.

2) திருமதி.ஆ.செ.பிரியங்கா காந்தி என்பவரின் பிறந்த நாள்.05.04.1991, தனியர் பணியில் சேர்ந்த நாள்.16.03.2022 அன்று தனியரின் வயது 31 வருடம், 8 மாதங்கள் மற்றும் தனியர் மீதொழில் நுட்பவியலில் (M.Sc Bionanotechnologies) தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே, தனியர் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதிகளின்படி இளநிலை உதவியாளருக்குரிய வயது மற்றும் கல்வித்தகுதிகளைப் பெற்றிருப்பதால் வயது மற்றும் கல்வித்தகுதிகளில் எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லை. மேலும், தனியரின் கல்வி சான்றிதழ்கள் அரசுச் தேர்வுத் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட்டு, மெய்தன்மை உடையவை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

3) எனவே, பார்வை 6–இல் காணும் அரசாணையின் (G.O.(Ms.) No.33 நாள்.08.03.2023 Labour Welfare and Skill Development (Q1) Department) பிற்சேர்க்கை அறிவிப்பு எண் 16 மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் விதி எண் 10 பிற்சேர்க்கை (II) ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படியும், தமிழ்நாடு மாநில (ம)

சார்நிலைப் பணிகள் பொதுவிதிகளின்படியும் இளநிலை உதவியாளருக்குரிய வயது (ம) கல்வித்தகுதகளில் எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லை என்பதால் திருமதி.ஆ.செ.பிரியங்காகாந்தி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு அன்னார் பணியில் சேர்ந்த நாளான 16.03.2022 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

4) மேலும், பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து, நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு தனியர் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத்தொகைகள் ஏதேனும் இருப்பின் அவற்றைப் பெறத் தகுதியுடையவராகிறார் என்று ஆணையிடப்படுகிறது.

5) தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் விதி எண்.32-ன்படி, இவர் மூன்றாண்டு தொடர்பணிக்காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவ காலத்தில் வைக்கப்படுகிறார்.

ஒம்/-xxxxx
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர்

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்காக

பெறுநர்

திருமதி.ஆ.செ.பிரியங்கா காந்தி
இளநிலை உதவியாளர்,
அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளி,
செக்கானூரணி, மதுரை. ……………உரிய வழிமுறையாக

**நகல் சமர்ப்பிக்கப்படுகிறது**
அரசு செயலாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

**நகல்**

1. செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3.
2. இணை இயக்குநர், கள்ளர் சீரமைப்பு, மதுரை
3. தலைமை ஆசிரியர், அரசு கள்ளர் மேநிலைப்பள்ளி, செக்கானூரணி, மதுரை.
4. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை.
5. இ-பிரிவு கண்காணிப்பாளர்.
6. அ5 – இருப்பு கோப்பு